**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2026–ம் ஆண்டு ஜுலை மாதம் 20 ஆம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம், ஆடித்திங்கள் 04 ம் நாள்

**அசல் வழக்கு எண்.52/2022**
**CNR No.TNTI14-000054-2022**

1. P.கீதா
2. S.சதீஸ்குமார் ... வாதிகள்

/எதிர்/

1. அன்னபூரணி
2. வட்டாட்சியர் அவர்கள், காங்கயம்
3. மாவட்ட ஆட்சியர் அவர்கள், திருப்பூர் மாவட்டம்
4. மைனர் கோகுல்

(மைனர் கோகுலுக்காக அவரது தாயாரும்
பாதுகாவலருமான அன்னபூரணி)
(Amended as per order in I.A.No.3/2024 Dated 18.11.2025) ...பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 16.07.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.P.சுப்பிரமணியம், M.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 1 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.P.கனகராஜு, B.Sc., M.A., M.L., அவர்கள் ஆஜராகியும், 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திருமதி. S.தேன்மொழி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 4 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்/நீதிமன்ற பாதுகாவலர் செல்வி.ஜெயஸ்ரீ, M.Com.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும்

இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

## தீர்ப்புரை

வாதிகள் மற்றும் 1, 4 பிரதிவாதிகள் மட்டும் தான் கடந்த 20.05.2021ம் தேதியில் இறந்துபோன சுப்பிரமணியம் மகன் சுந்தர் மனோகரனுக்கு வாரிசுகள் என்று விளம்புகை செய்யும்படிக்கும் தாவா செலவுத்தொகை வாதிகளுக்கு பிரதிவாதிகளால் கிடைக்கும்படிக்கும் இவ்வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:–**

i) வாதிகளின் தகப்பனார் சுந்தர்மனோகரன் மற்றும் வாதிகளின் தாயார் கண்ணம்மாள் ஆகியோர்களுக்கு பொள்ளாச்சி வேட்டைகாரன்புதூர் அழுக்குச் சுவாமி திருக்கோயிலில் 19.11.1993 தேதியில் திருமணம் நடைபெற்றது. வாதிகள் காலம்சென்ற சுந்தர்மனோகரன் மற்றும் அவரது மனைவி கண்ணம்மாள் ஆகியோருக்கு பிறந்த மகள் மற்றும் மகன் ஆவார்கள். வாதிகளின் தாயார் கண்ணம்மாள் 27.02.2012ம் தேதியில் காலமாகிவிட்டார். வாதிகளின் தகப்பனார் சுந்தர்மனோகரன், வாதிகளின் தாயாரான கண்ணம்மாளின் இறப்பிற்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதியை கடந்த 2013ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். 1ம் பிரதிவாதி காலம்சென்ற சுந்தர்மனோகரனின் 2ம் மனைவி ஆவார்.

ii) 1ம் வாதிக்கு திருமணம் நடைபெற்று தனது கணவருடன் வசித்து வருகிறார். மேற்படி சுந்தர்மனோகரனின் 2ம் திருமணத்திற்கு பின்னிட்டு, 2ம் வாதி கொடுவாயில் அமைந்துள்ள பாரதியார் குருகலம் டிரஸ்டால் நடத்தி வரும்

ஆன்மீக, பண்பாட்டு பயிற்சி மையம் மற்றும் ஆதரவற்ற மானவர்கள் இல்லத்தில் தங்கி கல்வி பயின்று வருகிறார். வாதிகளின் தகப்பனாரான சுந்தர்மனோகரன் கடந்த 20.05.2021 தேதியில் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியை வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார்.

iii) இந்நிலையில் மேற்படி சுந்தர்மனோகரனின் இறப்புக்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதி, வாதிகளை சேர்க்காமல் 2ம் பிரதிவாதியிடம் மேற்படி சுந்தர்மனோகரனுக்கு 1ம் பிரதிவாதி மட்டுமே வாரிசு என கோரி விண்ணப்பம் செய்ய முயற்சி செய்து வருவது 2ம் வாதிக்கு தெரிய வந்தவுடன் கடந்த 12.06.2021 மற்றும் 20.11.2021 தேதிகளில் 2ம் பிரதிவாதிக்கு விண்ணப்பம் கொடுத்ததன் பேரில் 2ம் பிரதிவாதி கடந்த 23.12.2021 தேதியில் மூ.மூ.4659/2021/ஆ4-ல் மேற்படி சுந்தர்மனோகரன் என்பவருக்கு இரண்டு மனைவிகள் உள்ள காரணத்தினாலும், வாரிசுகளை இனம் காண முடியாத சூழ்நிலை உள்ள காரணத்தினாலும் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு பதில் அளிக்கப்பட்டது. 1ம் பிரதிவாதியின் மகன் மைனர் கோகுல் 4ம் பிரதிவாதியாக இ.ம.எண்.2/2023 மனுவின் அடிப்படையில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார். எனவே வாதிகள் மற்றும் 1, 4 பிரதிவாதிகள் மட்டும் தான் கடந்த 20.05.2021ம் தேதியில் இறந்துபோன சுப்பிரமணியம் மகன் சுந்தர்மனோகரனுக்கு வாரிசுகள் என்று விளம்புகை செய்து உத்தரவிட வேண்டும் என்பதே வாதிகள் தரப்பு வழக்குரை சுருக்கமாகும்.

<u>2) 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரைச் சுருக்கம் :-</u>

i) வாதிகளின் தாவா பொய், மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும், ஆவணங்கள் படியும் செல்லத்தக்கதல்ல. இப்பிரதிவாதி இந்த எதிர்

வழக்குரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர மற்றவைகளை வாதிகளே கண்டிப்பாக ஆவணப்பூர்வமாக நிரூபிக்க வேண்டியது.

ii) காலம்சென்ற சுந்தர மனோகரனுக்கு இரண்டு மனைவிகள் ஆவார்கள். முதல் மனைவி கண்ணம்மாள் என்பவருக்கும் சுந்தரமனோகரனுக்கும் பிறந்த குழந்தைகள் தான் வாதிகள் ஆவார்கள். மேற்படி கண்ணம்மாள் கடந்த 27.02.2012 ம் தேதி காலமாகிவிட்டார். பின்னிட்டு மேற்படி சுந்தர்மனோகரன் 1 ம் பிரதிவாதியை 2013 ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டு மேற்படியார்களுக்கு விசாலாட்சி மற்றும் 4 ம் பிரதிவாதி ஆகியோர்கள் உள்ளார்கள். மேற்படியார்கள் இருவரும் சுந்தர்மனோகரனின் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி சுந்தரமனோகரனுக்கு வாதிகள், 1 ம் பிரதிவாதி மற்றும் 1 ம் பிரதிவாதியின் குழந்தைகள் இருவர் ஆகிய ஐவர் வாரிசுகள் ஆவார்கள். ஆகவே மேற்படி 1 ம் பிரதிவாதிக்கும் சுந்தரமனோகரனுக்கும் பிறந்த மேற்படி குழந்தைகள் இருவரையும் வாரிசாக சேர்க்கும்பட்சம் சுந்தர்மனோகரனுக்கு வாரிசு சான்று வழங்க உத்திரவிடுவதில் 1 ம் பிரதிவாதிக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. தவறும் பட்சம் அவசிய தரப்பினரை தாவாவில் கட்சி சேர்க்காத காரணத்திற்காக தாவாவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே 1 ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை சுருக்கமாகும்.

<u>3) 2 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 3 ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரைச் சுருக்கம் :–</u>

i) வாதிகளின் தாவா பொய், மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும், ஆவணங்கள் படியும் செல்லத்தக்கதல்ல. இப்பிரதிவாதிகள் இந்த எதிர் வழக்குரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர மற்றவைகளை வாதிகளே கண்டிப்பாக ஆவணப்பூர்வமாக நிரூபிக்க வேண்டியது.

ii) வாதிகளின் தகப்பனார் சுந்தர்மனோகரன் என்பவரின் தாயார் யார் என்பதையும், அவரின் இறப்பு குறித்த எந்த விளக்கத்தையும் தாவாவில் வாதிகள் தரப்பில் தெரிவிக்கப்படாமல் வாரிசு சான்று கோரியுள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மேற்படி சுந்தர்மனோகரன் என்பவருக்கு வாதிகள், 1ம் பிரதிவாதி மட்டுமே வாரிசு என்பதை வாதிகளே நிரூபிக்க வேண்டியது. வாதிகள் மேற்படியாருக்கு வாரிசாக இருந்திருந்தால் இதர நபர்களின் வாரிசு இறப்பு சான்றிதழ்கள் பெறாமல் இதர நபர்கள் இறந்து காலங்கடந்த நிலையிலும் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அதற்கான காரணத்தையும் வாதிகளே நிரூபிக்க வேண்டியது.

iii) உண்மையான நேரடி வாரிசுகள் இறந்து காலங்கடந்து உள்ளதாலும், நிலுவையில் உள்ள வாரிசு விபரங்கள் விசாரணை செய்தும் வாதிகள் தரப்பில் உரிய ஆவணங்கள் ஒப்புவிக்காத நிலையிலும், லேட். சுந்தர்மனோகரன் என்பவரின் சட்டப்படியான வாரிசு விபர உண்மைநிலை அறிய இயல முடியாதால் தான் வாதிகள் மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி தவிர இறந்து போன லேட்.சுந்தர்மனோகரன் என்பவருக்கு வேறு வாரிசு எவரேனும் இருப்பது பற்றி 2ம் பிரதிவாதிக்கு பின்னிட்டு தெரிய வந்தால் வாதிகளுக்கு வழங்கிய வாரிசு சான்றிதழை ரத்து செய்யும் உரிமையை 2, 3 பிரதிவாதிகள் ரிசர்வு செய்து கொள்கிறார்கள். எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே 2, 3 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை சுருக்கமாகும்.

**<u>4) 4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரைச் சுருக்கம் :-</u>**

i) வாதிகளின் தாவா பொய், மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும், ஆவணங்கள் படியும் செல்லத்தக்கதல்ல. இப்பிரதிவாதி இந்த எதிர்

வழக்குரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர மற்றவைகளை வாதிகளே கண்டிப்பாக ஆவணப்பூர்வமாக நிரூபிக்க வேண்டியது.

ii) 4ம் பிரதிவாதி லேட். சுந்தரமனோகரனுக்கு மகன் ஆவார். 4ம் பிரதிவாதி லேட். சுந்தரமனோகரனின் சட்டப்பூர்வமான முதல்நிலை வாரிசு ஆவார். 4ம் பிரதிவாதியையும் சேர்த்து மேற்படியாருக்கு வாரிசு சான்று வழங்க உத்தரவிடுவதில் 4ம் பிரதிவாதிக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. எனவே மைனர் பிரதிவாதியின் நலனுக்கு விரோதமில்லாமல் தாவாவில் தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்பதே 4ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை சுருக்கமாகும்.

**<u>5. எழுவினாக்கள்</u>:-**

மேற்படி இரு தரப்பு வாதுரைகளையும், வழக்குரை மற்றும் எதிர் வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இவ்வழக்கின் தீர்விற்காக கடந்த 17.04.2026 அன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்ட 1 மற்றும் 2 எழுவினாக்களை வனைந்துள்ளது.

**<u>6. எழுவினாக்கள் 1 மற்றும் 2 :-</u>**

| | |
|---|---|
| **எழுவினா – 1** | கடந்த 20.05.2021 தேதியில் இறந்துபோன சுப்பிரமணியம் என்பவருக்கு வாதிகள் மற்றும் 1, 4 பிரதிவாதிகள் மட்டுமே வாரிசுகள் என்ற விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா? |
| **எழுவினா – 2** | வாதிகளுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன? |

7. இந்த வழக்கில் வாதுரையின்போது வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் தங்களுடைய வாதத்தின்போது முன்வைக்கப்பட்ட வாதுரையின் பேரிலும் இந்த வழக்கு ஆவணங்களை பரிசீலித்த வகையிலும் இந்த வழக்கில் ஒருமித்த தீர்வு காணும் வகையில் 17.04.2026 அன்று இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட எழுவினா எண்.1ஐ உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 14 விதி 5ன் கீழ் இன்று பின்வருமாறு திருத்தி அமைக்கிறது.

**8. திருத்தி அமைக்கப்பட்ட எழுவினா 1 :–**

| | |
|---|---|
| **திருத்தி அமைக்கப்பட்ட எழுவினா – 1** | கடந்த 20.05.2021 தேதியில் இறந்துபோன சுப்பிரமணியம் மகன் சுந்தர்மனோகரன் என்பவருக்கு வாதிகள் மற்றும் 1, 4 பிரதிவாதிகள் மட்டுமே வாரிசுகள் என்ற விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா? |

9. வழக்காவணங்களின் பரிசீலனையிலிருந்து இவ்வழக்கின் தீர்விற்காக இன்று இந்நீதிமன்றம் திருத்தி அமைத்துள்ள எழுவினா எண்.1ஐ பொறுத்து இரு தரப்பிலும் போதிய சாட்சியங்கள் முன்னிடப்பட்டுள்ளதால் மேற்படி திருத்தப்பட்ட எழுவினா எண்.1ற்கு தீர்வு காண்பது உபயதரப்பினர்களை எவ்விதத்திலும் பாதிப்படைய செய்யாது என்று தீர்மானித்து மேற்படி திருத்தி அமைக்கப்பட்ட எழுவினா 1ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் 1ம் வாதி திருமதி. கீதா வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பு சாட்சியாக திருமதி. ஜெயபாரதி என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். 2, 3 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம்

இந்நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டுள்ளது. 1, 4 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

10. கற்றறிந்த வாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் வாதிகளின் தகப்பனார் சுந்தர்மனோகரன் மற்றும் வாதிகளின் தாயார் கண்ணம்மாள் ஆகியோர்களுக்கு கடந்த 19.11.1993 தேதியில் திருமணம் நடைபெற்று மேற்படியார்களுக்கு வாதிகள் பிறந்தார்கள் என்றும் வாதிகளின் தாயாரான கண்ணம்மாளின் இறப்பிற்கு பின்னிட்டு மேற்படி சுந்தர்மனோகரன் 1ம் பிரதிவாதியை கடந்த 2013ம் ஆண்டு 2 வதாக திருமணம் செய்து கொண்டதில் 4ம் பிரதிவாதி பிறந்தார் என்றும் வாதிகளின் தகப்பனாரான சுந்தர்மனோகரன் கடந்த 20.05.2021 தேதியில் இறந்துவிட்டார் என்றும் மேற்படியாரின் இறப்புக்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதி, வாதிகளை சேர்க்காமல் 2ம் பிரதிவாதியிடம் வாரிசு சான்று கோரி விண்ணப்பம் செய்ய முயற்சி செய்து வருவது 2ம் வாதிக்கு தெரிய வந்து கடந்த 12.06.2021 மற்றும் 20.11.2021 தேதிகளில் 2ம் பிரதிவாதிக்கு மனு கொடுத்து அதில் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு பதில் அளிக்கப்பட்டது என்றும் எனவே வாதிகள் மற்றும் 1, 4 பிரதிவாதிகள் மட்டும் தான் கடந்த 20.05.2021ம் தேதியில் இறந்துபோன சுப்பிரமணியம் மகன் சுந்தர்மனோகரனுக்கு வாரிசுகள் என்று விளம்புகை செய்து உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

11. கற்றறிந்த 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் காலம்சென்ற சுந்தர மனோகரனுக்கு இரண்டு மனைவிகள் என்றும் முதல் மனைவி கண்ணம்மாள் என்பவருக்கும் சுந்தரமனோகரனுக்கும் பிறந்த குழந்தைகள் தான் வாதிகள் என்றும் மேற்படி கண்ணம்மாள் கடந்த

27.02.2012ம் தேதி காலமாகிவிட்டார் என்றும் பின்னிட்டு மேற்படி சுந்தர்மனோகரன் 1ம் பிரதிவாதியை 2013ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டு மேற்படியார்களுக்கு 4ம் பிரதிவாதி பிறந்தார் என்றும் மேற்படி சுந்தரமனோகரனுக்கு வாதிகள், 1ம் பிரதிவாதி மற்றும் 4ம் பிரதிவாதி ஆகியோர்கள் வாரிசுகள் என்றும் வாதிடப்பட்டது.

12. கற்றறிந்த 2, 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் வாதிகளின் தகப்பனார் சுந்தர்மனோகரன் என்பவரின் தாயார் யார் என்பதையும், அவரின் இறப்பு குறித்த எந்த விளக்கத்தையும் தாவாவில் வாதிகள் தரப்பில் தெரிவிக்கப்படாமல் வாரிசு சான்று கோரியுள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் உண்மையான நேரடி வாரிசுகள் இறந்து காலங்கடந்து உள்ளதாலும், நிலுவையில் உள்ள வாரிசு விபரங்கள் விசாரணை செய்தும் வாதிகள் தரப்பில் உரிய ஆவணங்கள் ஒப்புவிக்காத நிலையிலும், லேட். சுந்தர்மனோகரன் என்பவரின் சட்டப்படியான வாரிசு விபர உண்மைநிலை அறிய இயல முடியாதால் தான் வாதிகள் மனு நிராகரிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

13. கற்றறிந்த 4ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் 4ம் பிரதிவாதி லேட். சுந்தரமனோகரனுக்கு மகன் என்றும் 4ம் பிரதிவாதி லேட். சுந்தரமனோகரனின் சட்டப்பூர்வமான முதல்நிலை வாரிசு என்றும் 4ம் பிரதிவாதியையும் சேர்த்து மேற்படியாருக்கு வாரிசு சான்று வழங்க உத்தரவிடுவதில் 4ம் பிரதிவாதிக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும் எனவே மைனர் பிரதிவாதியின் நலனுக்கு விரோதமில்லாமல் தாவாவில் தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**14 . திருத்தி அமைக்கப்பட்ட எழுவினா எண்.1 க்கான தீர்வு :-**

| | |
|---|---|
| **திருத்தி அமைக்கப்பட்ட எழுவினா – 1** | கடந்த 20.05.2021 தேதியில் இறந்துபோன சுப்பிரமணியம் மகன் சுந்தர்மனோகரன் என்பவருக்கு வாதிகள் மற்றும் 1, 4 பிரதிவாதிகள் மட்டுமே வாரிசுகள் என்ற விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா? |

15. வாதிகள் தரப்பில் காலம்சென்ற சுந்தர்மனோகரன் என்பவருக்கு வாதிகள் மற்றும் 1, 4 பிரதிவாதிகள் மட்டும் தான் முதல்நிலை வாரிசுகள் என்றும் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளைப் பொறுத்து இந்நீதிமன்றம் பரிசீலிக்கும்போது வா.சா.ஆ.1 ஆவணமாக 19.11.1993 தேதியிட்ட சுந்தர்மனோகரன் மற்றும் கண்ணம்மாள் ஆகியோர்களின் திருமண அழைப்பிதழ் மற்றும் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களான 1, 2 வாதிகளின் பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை பரிசீலிக்கும்போது சுந்தர்மனோகரன் மற்றும் கண்ணம்மாள் ஆகியோர்களுக்கு திருமணம் நடைபெற்று மேற்படியார்களுக்கு 1ம் வாதி கடந்த 28.02.1995 தேதியிலும், 2ம் வாதி கடந்த 09.02.2000 தேதியிலும் பிறந்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது.

16. வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.7 ஆவணங்களான சுந்தர்மனோகரன் என்பவரின் மனைவியான கண்ணம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் மற்றும் சுந்தர்மனோகரன் என்பவரின் இறப்பு சான்றிதழை பரிசீலிக்கும்போது மேற்படியார்கள் முறையே கடந்த 27.02.2012 மற்றும் 20.05.2021 தேதிகளில் இறந்துவிட்டார்கள் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்களாக 1, 2 வாதிகளின் ஆதார் அட்டை நகல்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

17. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது சுந்தர்மனோகரன் என்பவருக்கும் கண்ணம்மாள் என்பவருக்கும் பிறந்தவர்கள் தான் 1, 2 வாதிகள் என்பதைப் பொறுத்தும் சுந்தர்மனோகரன் என்பவரின் முதல் மனைவியான கண்ணம்மாள் என்பவர் இறந்ததற்கு பின்னிட்டு சுந்தர்மனோகரன் 1ம் பிரதிவாதியை கடந்த 2013ம் ஆண்டு இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டுள்ளார் என்பதைப் பொறுத்தும் மேற்படி சுந்தர்மனோகரன் என்பவருக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பிறந்தவர் தான் 4ம் பிரதிவாதி என்பதைப் பொறுத்தும் உபயவாதிகளுக்கிடையே பூசல் எதுவும் இல்லை.

18. 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் சுந்தர்மனோகரன் 1ம் பிரதிவாதியை 2013ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டு மேற்படியார்களுக்கு விசாலாட்சி மற்றும் 4ம் பிரதிவாதி ஆகியோர்கள் உள்ளார்கள் என்றும் மேற்படியார்கள் இருவரும் சுந்தர்மனோகரனின் வாரிசுகள் என்றும் மேற்படி சுந்தரமனோகரனுக்கு வாதிகள், 1ம் பிரதிவாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் குழந்தைகள் இருவர் ஆகிய ஐவர் வாரிசுகள் என்றும் சொல்லப்பட்டு மேற்படி சங்கதிகள் வாதிகள் தரப்பில் மறுக்கப்பட்டு 1, 2 வாதிகள் மற்றும் 1 மற்றும் 4 பிரதிவாதிகள் மட்டும் தான் சுந்தர்மனோகரன் என்பவரின் முதல்நிலை வாரிசுகள் என்றும் மறுக்கப்பட்டுள்ளது.

19. 1ம் பிரதிவாதி தரப்பில் 1ம் பிரதிவாதிக்கும் இறந்துபோன சுந்தர் மனோகரன் என்பவருக்கும் 4ம் பிரதிவாதி தவிர விசாலாட்சி என்ற ஒரு வாரிசு உள்ளதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் அதைப் பொறுத்து நிரூபணம் செய்யும் வகையில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை. மேலும் 1ம் பிரதிவாதி இந்த வழக்கில் தன்னை ஒரு சாட்சியாக

விசாரித்துக்கொள்ளவில்லை. மேலும் மேற்படி விசாலாட்சி என்பவரை தரப்பினராக சேர்க்க 1ம் பிரதிவாதி தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

20. வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் **என் தந்தை சுந்தர்மனோகரனுக்கு என் தாயார் கண்ணம்மாளும் 1ம் பிரதிவாதியும் மனைவிகள் என்று சொன்னால் சரிதான். என் தாயார் இறந்ததற்கு பின்னிட்டு தான் என் தகப்பனார் சுந்தர்மனோகரன் என்பவர் 1ம் பிரதிவாதியை சட்டப்படியாக திருமணம் செய்து கொண்டார் என்று சொன்னால் சரிதான். என் தகப்பனார் சுந்தர்மனோகரன் என்பவருக்கு முதல் மனைவியான என் தாயார் கண்ணம்மாள் மூலம் நானும் 2ம் வாதியும் வாரிசு என்று சொன்னால் சரிதான். எங்களை தவிர என் பெற்றோருக்கு வேறு யாரும் வாரிசுகள் இல்லை என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதி அன்னபூரணி என்பவருக்கும் என் தகப்பனார் சுந்தர் மனோகரன் என்பவருக்கும் 4ம் பிரதிவாதியை தவிர வேறு குழந்தைகள் யாரும் இல்லை என்று சொன்னால் சரிதான்** என்றும் **என் தகப்பனாரின் பெற்றோர் பெயர் சுப்பிரமணியம் மற்றும் கல்யாணி. அவர்கள் தற்போது உயிரோடு இல்லை என்று சொன்னால் சரிதான்** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

21. வா.சா.1ன் குறுக்கு விசாரணையின்போது 1ம் பிரதிவாதி தரப்பில் 1ம் பிரதிவாதி அன்னபூரணி என்பவருக்கும் சுந்தர்மனோகரன் என்பவருக்கும் 4ம் பிரதிவாதியை தவிர வேறு குழந்தைகள் யாரும் இல்லை என்று கேள்விகள் கேட்கப்பட்டு அதை வா.சா.1 ஒப்புக்கொண்டுள்ளார். இதன்மூலம் 1ம் பிரதிவாதிக்கும் சுந்தர்மனோகரன் என்பவருக்கும் 4ம் பிரதிவாதி மட்டும் தான்

வாரிசு என்ற சங்கதியானது 1ம் பிரதிவாதி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டே மேற்படி கேள்விகள் வா.சா.1–விடம் கேட்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. மேலும் 1ம் பிரதிவாதி தரப்பில் 1ம் பிரதிவாதிக்கும் சுந்தர்மனோகரன் என்பவருக்கும் விசாலாட்சி என்பவரும் ஒரு வாரிசாக உள்ளார் என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்யும் பொறுப்பு 1ம் பிரதிவாதி வசமே உள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில் 1ம் பிரதிவாதி தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை.

22. வா.சா.2 ஐ 1ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில் பின்வருமாறு சாட்சியம் அளித்துள்ளார் **சுந்தர்மனோகரனின் முதல் மனைவி பெயர் கண்ணம்மாள் என்றால் சரிதான். அவர் 27.02.2012 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். கீதா மற்றும் சதீஸ்குமார் ஆகியோர்கள் தான் அவருக்கு வாரிசுகள் என்றால் சரிதான். பின்னிட்டு 2013 ம் ஆண்டு சுந்தர்மனோகரன் அன்னபூரணி என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றால் ஆமாம். அவர்களுக்கு கோகுல் மட்டுமே ஒரே வாரிசு என்றால் ஆமாம்** என்று சாட்சியம் அளித்துள்ளார். இதன்மூலம் 1ம் பிரதிவாதிக்கும் சுந்தர்மனோகரன் என்பவருக்கும் 4ம் பிரதிவாதி மட்டும் தான் வாரிசு என்ற சங்கதியானது 1ம் பிரதிவாதி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டே மேற்படி கேள்விகள் வா.சா.2–விடம் கேட்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது

23. மேற்படி வா.சா.1, வா.சா.2 ஆகியோர்களின் சாட்சியத்தின் பரிசீலனையில் இருந்து வாதிகளின் தகப்பனாரான சுந்தர்மனோகரன் என்பவருக்கு வாதிகளின் தாயாரான கண்ணம்மாள் என்பவர் தான் முதல்

மனைவி என்பதும் மேற்படியார்களுக்கு 1, 2 வாதிகள் வாரிசுகள் என்பதும் சுந்தர்மனோகரன் என்பவரின் முதல் மனைவியான கண்ணம்மாள் என்பவர் கடந்த 27.02.2012ம் தேதியில் இறந்ததற்கு பின்னிட்டு சுந்தர்மனோகரன் என்பவர் 1ம் பிரதிவாதியை கடந்த 2013ம் ஆண்டு இரண்டாவதாக சட்டப்படி திருமணம் செய்து கொண்டுள்ளார் என்பதும் மேற்படி சுந்தர்மனோகரன் என்பவருக்கும் 1ம் பிரதிவாதிக்கும் 4ம் பிரதிவாதி வாரிசாக உள்ளார் என்பதும் மேற்படி சுந்தர்மனோகரன் என்பவரின் பெற்றோர்கள் இறந்துவிட்டார்கள் என்பதும் கடந்த 20.05.2021ம் தேதியில் இறந்துபோன சுந்தர்மனோகரன் என்பவருக்கு 1, 2 வாதிகளும் மற்றும் 1, 4 பிரதிவாதிகளும் மட்டுமே சட்டப்படியான முதல்நிலை வாரிசுகள் என்பதும் தெளிவாகிறது.

24. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.8 ஆவணமாக 23.12.2021 தேதியிட்ட 2ம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட மூ.மூ.4659/2021/ஆ4 குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குறிப்பாணையை பரிசீலிக்கும்போது அதில் சுந்தர்மனோகரன் என்பவர் கடந்த 20.05.2021ம் தேதியன்று உடல்நலக் குறைவு காரணமாக இறந்துவிட்டார் என்றும் காலம் சென்ற நபருக்கு கண்ணம்மாள், அன்னபூரணி என்ற இரண்டு மனைவிகள் இருந்துள்ளார்கள் என்றும் அதில் முதல் மனைவி கண்ணம்மாள் என்பவருக்கு கீதா மற்றும் சதீஸ்குமார் ஆகியோர்கள் வாரிசுகள் என்றும் முதல் மனைவி கண்ணம்மாள் என்பவர் காலமான பிறகு இரண்டாவது மனைவி அன்னபூரணி என்பவருடன் வாழ்ந்து வந்துள்ளார் என்றும் இரண்டாவது மனைவிக்கு ஒரு மகன் மட்டுமே வாரிசு என்றும் சுந்தர்மனோகரனின் இரண்டாவது மனைவி அன்னபூரணியிடம் ஆவணங்கள் கோரப்பட்டதில் நாளதுவரை ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் எனவே சுந்தர்மனோகரன் என்பவருக்கு

இரண்டு மனைவிகள் உள்ள காரணத்தினாலும் வாரிசுகளை இனம் காண முடியாத சூழ்நிலை உள்ள காரணத்தினாலும் நீதிமன்றத்தை அணுகி உரிய பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு மேற்படி குறிப்பாணையில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.8 ஆவணத்தின் பரிசீலனையில் இருந்து 2ம் வாதி இறந்துபோன சுந்தர்மனோகரன் என்பவருக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்து 2ம் பிரதிவாதி நீதிமன்றம் மூலம் அணுகி வாரிசு சான்று பெற்றுக்கொள்ள அறிவுறுத்தியதன் காரணமாகவே வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்பதையும் அறிய முடிகிறது.

25. எனவே மேலேகண்ட விவாதங்கள்படியும் வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆகியோர்களின் சாட்சியம் மற்றும் வாதிகள் தரப்பு சான்றாவணங்களின் பரிசீலனையில் இருந்தும் வாதிகளின் தகப்பனாரான சுந்தர்மனோகரன் என்பவருக்கு கண்ணம்மாள் என்பவர் தான் முதல் மனைவி என்பதும் மேற்படி சுந்தர்மனோகரன் மற்றும் கண்ணம்மாள் ஆகியோர்களுக்கு பிறந்தவர்கள் தான் 1, 2 வாதிகள் என்பதும் மேற்படி கண்ணம்மாள் என்பவர் கடந்த 27.02.2012ம் தேதியில் காலமாகிவிட்டார் என்பதும் மேற்படியார் இறந்ததற்கு பின்னிட்டு சுந்தர்மனோகரன் என்பவர் 1ம் பிரதிவாதியை கடந்த 2013ம் ஆண்டு இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டுள்ளார் என்பதும் மேற்படி சுந்தர்மனோகரன் என்பவருக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பிறந்தவர் தான் 4ம் பிரதிவாதி என்பதும் மேற்படி சுந்தர்மனோகரன் என்பவர் கடந்த 20.05.2021ம் தேதியில் இறந்துவிட்டார் என்பதும் வாதிகள் தரப்பில் போதுமான வரையில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாலும் மேலேகண்ட விவாதங்கள்படி இறந்துபோன சுந்தர்மனோகரன் என்பவருக்கு 1, 2 வாதிகள் மற்றும் 1, 4 பிரதிவாதிகள்

ஆகியோர்கள் மட்டுமே இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 8ன் படி சட்டப்படியான முதல்நிலை வாரிசுகளாக உள்ளார்கள் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

26. எனவே மேலே கண்ட பரிசீலனைகளின்படியும் வா.சா.1, வா.சா.2 ஆகியோர்களின் சாட்சியம் மற்றும் வாதிகள் தரப்பு சான்றாவணங்களின் பரிசீலனைகளில் இருந்தும் கடந்த 20.05.2021ம் தேதியில் இறந்துபோன சுந்தர்மனோகரன் என்பவருக்கு 1, 2 வாதிகள் மற்றும் 1, 4 பிரதிவாதிகள் மட்டுமே சட்டப்படி முதல்நிலை வாரிசுகளாக உள்ளார்கள் என்பது வாதிகள் தரப்பில் போதுமான வரையில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்திருப்பதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்து வாதிகளுக்கு தாவாவில் கோரியபடி இறந்துபோன சுந்தர்மனோகரன் என்பவருக்கு 1, 2 வாதிகள் மற்றும் 1, 4 பிரதிவாதிகள் தான் சட்டப்படியான முதல்நிலை வாரிசுகள் என்ற விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து திருத்தி அமைக்கப்பட்ட எழுவினா எண்.1க்கு தீர்வு காண்கிறது.

**27. எழுவினா எண்.2க்கான தீர்வு :-**

| | |
|---|---|
| **எழுவினா – 2** | வாதிகளுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன? |

28. எழுவினா எண்.1க்கு தீர்வு கண்டுள்ளதன் அடிப்படையில், வாதிகளுக்கு மேற்கொண்டு கிடைக்கக்கூடிய பரிகாரங்கள் வேறு எதுவுமில்லை என்றும், இவ்வழக்கின் சங்கதி மற்றும் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட செலவு

தொகைகளை அவரவர்களே பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து இந்த எழுவினா 2 ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக**,

தாவா அனுமதிக்கப்பட்டு, கடந்த 20.05.2021ம் தேதியில் இறந்துபோன சுப்பிரமணியம் மகன் சுந்தர்மனோகரன் என்பவருக்கு 1, 2 வாதிகள் மற்றும் 1, 4 பிரதிவாதிகள் மட்டும் தான் சட்டப்படியான முதல்நிலை வாரிசுகள் என்று விளம்புகை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026–ம் ஆண்டு ஜுலை மாதம் 20ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.07.20 19:43:20 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**வாதிகள் தரப்பு சாட்சிகள்**:–

வா.சா.1 திருமதி. கீதா (1ம் வாதி)

வா.சா.2 திருமதி. ஜெயபாரதி (மூன்றாம் தரப்பினர்)

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**:–

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | – | திருமண அழைப்பிதழ் அசல் |
| வா.சா.ஆ.2 | 06.03.2000 | தேதியிட்ட 1ம் வாதியின் பிறப்பு சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.3 | 11.04.2000 | தேதியிட்ட 2ம் வாதியின் பிறப்பு சான்றிதழ் அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.4 | 22.07.2012 | தேதியிட்ட கண்ணம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.5 | – | 1ம் வாதியின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |
| வா.சா.ஆ.6 | – | 2ம் வாதியின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |
| வா.சா.ஆ.7 | 30.06.2021 | தேதியிட்ட சுந்தர்மனோகரன் என்பவரின் இறப்பு சான்றிதழ் கணினி நகல் |
| வா.சா.ஆ.8 | 23.12.2021 | தேதியிட்ட 2ம் பிரதிவாதியின் குறிப்பாணை உண்மை நகல் |
| வா.சா.ஆ.9 | 28.01.2022 | தேதியிட்ட பாரதியார் குருகுலம் டிரஸ்ட் சான்றிதழ் அசல் |

<u>**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u>:– இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.07.20 19:43:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.